



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 24.02.2024 சனிக்கிழமை அன்று, சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

### பிப்.26-ல் இல்லந்தோறும் திண்ணைப் பிரச்சாரம்

# மார்ச் 1-ல் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் எழுச்சிக் கூட்டம்!

## மாவட்டக் கூட்டத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேச்சு!

சென்னை, பிப்.25-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 24.02.2024 சனிக்கிழமை அன்று, சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத் தலைவர் கோ.ஏகப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: பா. தாயகம்கவி, அ. வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: ப.ரங்கநாதன், முன்னாள் எம்.எல்.ஏ., பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன் மற்றும் பரிதிஇளம்சுருதி, எம்.பி.எம். ஷேக்அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவஹர், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராஜன், இசட்.ஆசாத்.

பகுதிக் கழக செயலாளர்கள்: செ. தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி. சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, தேர்தல் பொறுப்பாளர்கள்: வே.கௌதமன், பி.டி.சி. செல்வராஜ், க.பிரபு, இரா. விடுதலை, ஒ.ஏ.நாகலிங்கம், பி.எம்.யாழினி,

பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி. செம்மொழி, சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஏ.பி.பூர்ணிமா, பி.ஜே.துளசிங்கம், அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், பாலமுருகன், க.வினோத், ஜி.ஜே. பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, வானவில் விஜய் நா.துலுக்காணம், G.தாமோதரன், எல்.பி.எப். மோகன், எம்.பிரோஸ்கான், பி.விஜயகுமார், எம். விநாயகம், து. ஆயிரம், துரைக்கண்ணன், மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி. பிரதீப்குமார், ஆர்.எஸ். சித்திக், எல்.சம்பத்குமார், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி. வி.நாகவள்ளி பிரபாகரன் மற்றும் வட்டகழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதிகழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

**தீர்மானம்: 1**

நின்ற தொகுதிகளிலெல்லாம் வென்ற தலைவர், நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய தலைவர், நம் முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய நினைவு மண்டபத்தையும்,

நம் தாய் தமிழ் நாட்டிற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணாவின் புதுப்பிக்கப்பட்ட நினைவகத்தையும் 26.2.2024 மாலை 7 மணி அளவில் திறந்து வைக்கவிருக்கும் நம்முடைய கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்கி பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம்: 2**

தமிழ்நாட்டின் தொழில் வளத்தை பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அதற்கான முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஜனவரி 28 அன்று அரசு முறை பயணமாக ஸ்பெயின் நாட்டிற்கு பத்து நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்நாட்டிலுள்ள முன்னணி நிறுவனங்களின் முதலீட்டாளர்களை சந்தித்து தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கான உகந்த சூழலை எடுத்துச் சொல்லி சுமார் 3640 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து அப்பயணத்தை சாதனைப் பயணமாக மாற்றிக் காட்டிய தமிழ்நாடு முதலமைச்சரை பாராட்டி இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம்: 3**

கழகத் தலைவர் தலைமையில் காணொலி காட்சி மூலம் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்.. நம் திராவிட மாடல் ஆட்சியின் மூன்றாண்டு சாதனைகளையும் தமிழ்நாடு அரசின் 2024-2025 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் சிறப்பு அம்சங்களையும் வீடுதோறும் கொண்டு சேர்க்கவும், அதே சமயம் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கும், தமிழுக்கும், தமிழர்களுக்கும் செய்து வரும் அநீதிகளை தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் எடுத்துரைக்கும் வகையில் பிப்ரவரி 26 ஆம் தேதி அன்று இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் திண்ணை பிரச்சாரத்தை சென்னை கிழக்கு மாவட்டம் முழுவதும் தொடங்கிடவும், மார்ச் 1 தலைவர் பிறந்த நாளை எழுச்சியுடன் கொண்டாடவும் உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

# திரு.வி.க நகர் வடக்கு பகுதி பாக முகவர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் அறிவிப்பு!

சென்னை, பிப். 25-

திரு.வி.க.நகர் வடக்குப் பகுதிச் செயலாளர் செ. தமிழ்வேந்தன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு: -

சென்னை கிழக்கு மாவட்டம் - திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி பாக நிலை முகவர்கள் கூட்டம் இன்று (25.02.2024) காலை 8 மணிக்கு, சமுதாய நலக்கூடம் வ.ஊ.சி நகர் முதல் தெரு ஆடுதொட்டி அருகில் நடைபெறுகிறது. இதில் ப. தாயகம்கவி எம்.எல்.ஏ., டாக்டர். யாழினி ஆகியோர் முன்னிலையில் வகிக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

இந்நிகழ்வில் மேயர். பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., மண்டல குழு தலைவர் சரிதமகேஷ்குமார், புனிதவதி ஏத்திராசன் , பொதுக்குழு உறுப்பினர் பி.உதயசங்கர், தில்லை கதிரவன், புல்லட்கி. ரமேஷ், R.ராஜன், புவனவதி, கினார்.ஆறுமுகம், மு.சரவணன், அபாய், எம்.ஏ..டீக்கா, எஸ்.புஷ்பராஜ், மா. ருத்ரமூர்த்தி, ஜி.கிருஷ்ணகுமார், பரிமளாசுரேஷ்பாபு. ஆகியோர் பங்கேற்கின்றனர்.

நன்றியுரை சே மணிமாறன் இளைஞரணி பகுதி அமைப்பாளர்

இதில் மாவட்ட பிரதிநிதிகள், பகுதிக்குட்பட்ட மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தகவல்தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள், பாகப் பொறுப்பாளர்கள், பாகநிலை முகவர்கள் (BLA2), பாக களப்பணியாளர்கள் (BLC), அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




கழகத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அணியின் செயலாளர் பி.டி.சி. செல்வராஜ் தலைமையில் தலைமைக் கழக அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை செயலாளர்கள் பி.டி.சி.பாலு, வரதன்,ராஜா குப்புசாமி, கொல்லாபுரம் ராஜேந்திரன், ராஜகாந்தன், கோவை தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கழகத் தலைவரின் பிறந்தநாள் விழா மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் பணி தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

### அம்பத்தூர் வடக்கு பகுதி சார்பில்

# பாகநிலை முகவர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

## ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ தலைமை - பி.டிசி. செல்வராஜ் பங்கேற்பு!

சென்னை, பிப். 25 -

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க, அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான பி.கே. சேகர்பாபு ஆலோசனையின் படி அம்பத்தூர் வடக்கு பகுதியில் பாக நிலை முகவர்களின் (BLA 2) ஆலோசனைக் கூட்டம் இன்று (25.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 3.00 மணியளவில் பஜார் வீதி, MTH சாலை, முருகன் கோவில் அருகில் அமைந்துள்ள திருமால் திருமண மண்டபத்தில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப் சாமுவேல் தலைமையில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

த.செ.கு.உருப்பினரும், 7வதுமண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி மரு. அணி.அமை ஜி.சாந்தகுமாரி, மா.மீனவ.அணி.அது.ஆயிரம் அவர்கள் முன்னிலையில், தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் கலந்துக் கொண்டு (BLA2) பாக நிலை முகவர்கள் மற்றும் தொகுதி பாக நிலை ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்.

எனவே, இக்கூட்டத்தில் அம்பத்தூர் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், பாகநிலை முகவர்கள், தொகுதி பாக நிலை ஒருங்கினைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத் தேர்தல் -2024

## 'நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு' மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## (திருத்தப்பட்டது)

# தலைமைக் கழக அறிவிப்பு

**தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர்** வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்டு பெற்று வருகிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து திமுக தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம்

### (திருத்தப்பட்டது)

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| 26.02.2024 | சென்னை (காலை 10.00 மணி) அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கம் | காஞ்சிபுரம் வடக்கு<br>காஞ்சிபுரம் தெற்கு<br>திருவள்ளூர் கிழக்கு<br>திருவள்ளூர் மேற்கு<br>திருவள்ளூர் மத்திய |
| 27.02.2024 | சென்னை (காலை 10.00 மணி) அண்ணா அறிவாலயம் முரசொலி மாறன் வளாகம்) | சிறப்பு அழைப்பாளர்கள் சந்திப்பு (அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் மட்டும்) சென்னை வடகிழக்கு |
| | சென்னை (மாலை 3.00 மணி முதல்) அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கம் | சென்னை வடக்கு<br>சென்னை வட கிழக்கு<br>சென்னை கிழக்கு<br>சென்னை மேற்கு<br>சென்னை தென்மேற்கு<br>சென்னை தெற்கு |
| 02.03.2024 | தஞ்சாவூர் (காலை 10.00 மணி) | தஞ்சை வடக்கு<br>தஞ்சை மத்திய<br>தஞ்சை தெற்கு<br>திருவாரூர்<br>நாகை<br>மயிலாடுதுறை<br>திருச்சி வடக்கு<br>திருச்சி தெற்கு<br>திருச்சி மத்திய<br>புதுக்கோட்டை வடக்கு<br>புதுக்கோட்டை தெற்கு |
| | விழுப்புரம் (மாலை 3.00 மணி) | விழுப்புரம் வடக்கு<br>விழுப்புரம் தெற்கு<br>கடலூர் கிழக்கு<br>கடலூர் மேற்கு<br>அரியலூர்<br>பெரம்பலூர் |

குமேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 24.2.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காமினி தேவன் முன்னிலையில் வார் ரூமை கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கே.எஸ்.ரவிச்சந்திரன், பச்சையப்பன், ராஜா முஹம்மது, கே.ஆர்.ராஜு, சேர்மன் சுப்பிரமணியன், வின்சென்ட் முருகையா, ஹரி பாலகிருஷ்ணன், சையது அலி சேக் முகமது, ராமராஜ், கே.ஏ.கந்தசாமி, கண்ணன், வழக்கறிஞர்கள் உத்தரநாயகம், பால் செல்வராஜ், கணேசன், முகமது ஷா, சந்தான மசி, ஜெய் சிங், சிவசுப்பு, செந்தூர் பாண்டி, சிலம்பரசன், அருள்ராஜ், முத்துராஜ், விமல் குமார், மந்திர மூர்த்தி, மாரியப்பன், மணிகண்டன் உட்பட பல கலந்து கொண்டனர்.